எங்கிருந்தாலும் எங்களின் இதயம் உங்களுக்காக துடிக்கும்
எங்களின் வாழ்து மழைத்துளியாகி உங்களை வந்து நனைக்கும்
இது தாயின் உயிர்மீது செய்கின்ற சத்தியம் தமிழீழம் உன்னாலே காண்பது நிச்சயம்

(எங்கிருந்தாலும்...) இசை

வயல்களில் தாமரை அதை மறந்தோமா வாசகசாலை அதை மறந்தோமா அடைமழைக்காலம் அதை மறந்தோமா அலைகளில் தோனி அதை மறந்துமா ஏதை மறந்தோம் அண்ணா உங்களை மறக்க நீங்கள் எதைக்கேட்டாலும் தருவோம் தருவோம் தமிழ் மானம் பிறக்க

(எங்கிருந்தாலும்....) இசை

சிதறிய உடல்கள் அதை மறந்தோமா கதறிய குரல்கள் அதை மறந்தோமா காடலினில் நடந்தோ அதை மறந்தோமா சுடலையில் கிடந்தோம் அதை மறந்தோமா எதைமறந்தோம் அண்ணா உங்களை மறக்க நீங்கள் எதைக்கேட்டாலும் தருவோம் தருவோம் தமிழ் மானம் சிறக்க

எங்கிருந்தாலும் எங்களின் இதயம் உங்களுக்காக துடிக்கும் எங்களின் உழைப்பு சுடுகுழல் வளியே விடுதலைக்காக வெடிக்கும் இது தாயின் உயிமீது செய்கின்ற சத்தியம் தமிழ் ஈழம் உன்னாலே காண்பது நிச்சயம்

எங்கிருந்தாலும் எங்கலின் இதயம் உங்களுக்காக துடிக்கும் எங்களின் வாழ்த்து மழைத்துளியாகி உங்களை வந்து நனைக்கும் ம்ம்ம்ம்ம்ம்ம் ம்ம்ம்ம்ம்ம்ம் அ ஆஆஆ அ அ ஆஆஆஆ